DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.111/2025**

PROSECUTION WITNESS No. 6

| | |
|---|---|
| Name | : Vijayanand |
| Father's Name | : Sankaran |
| Age | : 44 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 12th day of November, 2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது எச்-5 புது வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்குப் பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 01.02.2024 அன்று நிலைய குற்ற எண் 65/2024, சட்டப்பிரிவுகள் 294b, 307, 506 (ii) இ.த.ச(@) 294b, 302, இ.த.ச. வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்துபோன தமிழ்வாணன் உடலில் பிரேதப் பரிசோதனை செய்ய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று அரசு ஸ்டான்லி மருத்துமனை சென்று சட்டம் சார்ந்த மருத்துவத்துறை மருத்துவர்வசம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேதப்பரிசோதனை செய்ய

உதவியாக இருந்தேன். பிரேதப்பரிசோதனை முடிந்தபிறகு அந்த உடலை அவரது மனைவியிடம் ஒப்படைத்தேன். மறுநாள் 02.02.2024 அன்று அரசு ஸ்டான்லி மருத்துமனை சென்று இறந்தவரின் உடல்உறுப்புகளை பெற்று தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து அத்தாட்சி பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

மறுநாள் 02.02.2024 அன்று அரசு ஸ்டான்லி மருத்துமனை சென்று இறந்தவரின் உடல்உறுப்புகளை பெற்று தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து அத்தாட்சி பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்ததாக ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் கூறினேனா என்றால் கூறினேன்.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |